09

# சங்க இலக்கியங்கள்



## தமிழின் பெருமை

இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ச் செய்யுட்களில் சில கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை. ஆதலால் தமிழ் இலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் பதினோராம் நூற்றாண்டிலும், கன்னட மொழியில் ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆதி இலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பல தேசங்களிற் பயிலப்பட்டு பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழிகளிலேகூட இலக்கியம் முதன்முதலில் தோன்றியது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்தான். ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளில் உள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழைமை வாய்ந்தவை.

### கடைச்சங்கம்

மிகப் பழைமையான காலந் தொட்டே தமிழ் சிறப்புற்று வாழ்ந்துவந்த இடம் பாண்டிய நாடு என்று கூறுவர். வில்லிபுத்தூரர் இயற்றிய பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில், அவர் மகனார் வரந்தருவார்.

‘‘பொருப்பில் பிறந்து, தென்னன் புகழிலே வளர்ந்து,
சங்கத்(து) இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே
தவழ்ந்த பேதை.’’

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப்பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது என்பது கர்ணபரம்பரைச் செய்தி. கிறிஸ்து சகாப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச்சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்து வந்த பணி என்று கூறப்படுகிறது. நானூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய வரலாறு இறையனார் களவியல் உரை என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச்சங்கம் என்றும், இதற்கு முன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும், களவியல் உரை கூறும். தலைச்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்க காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் சங்க இலக்கியங்கள் என வழங்குகிறோம். தொல்காப்பியம் என்ற பேரிலக்கணநூல் இடைச்சங்க காலத்து இறுதியில், அதாவது சுமார் கி.மு. 5000 இல் தோன்றியது என்றும், தலை, இடைச்சங்களிலே பிறந்த ஏனை நூல்கள் கடல் கொள்ளப்பட்டு அழிந்து விட்டன என்றும் பரம்பரை வரலாறு கூறுகிறது. ஆனால் தொல்காப்பியர் காலம் கி.பி.3-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்பதற்குத்தக்க சான்றுகள் உள்ளன.

## பத்துப்பாட்டு

சங்க இலக்கியங்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு பெருங் கூறாகப் பகுக்கலாம். பத்துப் பாட்டுக்களாவன : முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை,

''முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு, வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து.''

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக்கொடையாளியின் பெருமையைக் கூறி, அவனிடம் சென்று தாம் பெற்றது போல் பெருஞ் செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்த நூல் வகையின் கருத்து. ஆறு - வழி : படை - படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக்காஞ்சி நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை உயர்ந்த லட்சியங்களை மேற்கொண்டு இனிதாகக் கழித்தல் வேண்டும் என வற்புறுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டது என்று சரித்திரம் வழங்குகிறது. இப்பாட்டுக்களுள் சில அகப்பொருளையும் சில புறப்பொருளையும் பற்றியவை. அகம் என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி; புறம் என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான், இளந்திரையனும் பத்துப்பாட்டிற் புகழப்பட்டிருக்கின்றனர்.

## எட்டுத்தொகை

எட்டுத் தொகையாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றை,

''நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து), ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே, அகம், புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.''

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம், இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை : ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும், பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும், பரிபாடலில் எழுபது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள்ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டாலும் இயன்றன. மற்றை ஆறு தொகை நூல்களும்

ஆசிரியப்பாவால் இயன்றன. அகம் பற்றியவற்றுள் ஐங்குறுநூறு, திணை ஒவ்வொன்றிற்கும் நூறுவீதம், குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம் பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச் செய்யுள் வீதம், பத்து சேர அரசர்களுக்கு உரிய நூறு செய்யுட்கள் கொண்டது. பதிற்றுப்பத்து. எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண்முறையால் தொகுக்கப்பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை. கலித்தொகையிலுள்ள தாழிசைகள் இசையோடு பாடுதற்கு ஒத்தனவாயுள்ளன.

தொகை நூல் ஒவ்வொன்றிலும் உள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவரல்லர்; ஓரினத்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர்; ஒரு சமயத்தைச் சார்ந்தவருமல்லர். அவர்களைக் கணக்கிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் என்று களவியல் உரை கூறும்.

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒருவருக்குக் கல்பொரு சிறுநுரையார் என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

"கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே" (குறுந் - 290)

என்று வந்துள்ளது. இங்கே காணும் உவமானத்தொடரினின்றும் அவருக்குப்பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவர்க்கு வழங்கிய இப்புனை 'பெயர் பிற்காலத்தும் வழங்கி அதுவே பெயராக முடிந்திருக்கலாம். அல்லது அவர் பெயர் மறைந்து போன பிற்பாடு, செய்யுளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக்கப்பட்டும் இருக்கலாம். சில பெயர்கள் முற்கூறிய படியும், சில பெயர்கள் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இதுவென்று இப்போது நாம் தெரியக்கூடவில்லை. இங்ஙனம் புனைபெயருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக்கிட்டது.

## பெண்பாற் புலவர்கள்

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண்பால் - புலவர்கள் காணப்படு கின்றார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொதுமக்களிடையே கல்வி பரவாத முற்காலத்தில் இவ்வளவாகப் பெண்பால் - புலவர் இருந்தமை பாராட்டுக்குரியது. இவருள்ளே ஔவையார், வெள்ளிவீதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரிமகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

## தொகை நூல்களும் கிரேக்க அந்தாலஜிகளும்

தமிழிலே தொகை நூல்கள் மிகப் புராதன காலத்தில் தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் அந்தாலஜி என்று கூறப்படும் தொகை நூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகை நூலின் வரலாற்றைக் குறித்து ரிச்செர்ட் கார்நெட் என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றார். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி.பி. 90ல் மிலீகர் என்பவரால் இத்தொகை நூல் தொகுக்கப் பெற்றதாம். இத்தொகை நூற் செய்யுட்கள், தெய்வங்களையும், புகழ் பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லல், பொருள் ஆழமுடைமை, நவின்றோர்க்கு இனிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இவற்றில் நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது. இவ்வகை இயல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல் புறநானூறு என்னும் தமிழ்த் தொகை நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதாய் உள்ளது. மிலீகரது தொகை நூ

லுக்குப் பின் நான்கு தொகை நூல்கள் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி.பி. 483 - 565) காலத்திலாகும். இந்தத் தொகை நூலிலே காதற் செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப் பெற்றுள்ளன என்று கூறப்படுகிறது. இதனோடு தமிழ்த் தொகை நூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

## தொகைநூல்களின் பயன்

பழைமையிலும், பொருள் அமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரமேயன்றி, வேறு சில அம்சங்களிலும் இந்த இரு மொழிகளிலும் உள்ளதொகை நூல்கள் ஒப்பிடற்கு உரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறிவந்திருக்கிறது. இம்மாறுபாடுகளுக்கு இடையேயும் கிரேக்கத்தொகை நூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்து உதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த் தொகை நூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழக்க ஒழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத்து எழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுவதற்கும் இத்தொகை நூல்கள் உதவின. இவ்வாறாகப் பலபடியாலும் இரு தேசத்துத் தொகை நூல்களும் ஒன்றோடு ஒன்று உவமிக்கக் கூடியனவாயுள்ளன.

*-பேராசிரியர். எஸ். வையாபுரிப்பிள்ளை-*

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| சகாப்தம் | - | நூற்றாண்டு |
| பாயிரம் | - | முன்னுரை |
| வழிப்படுத்தல் | - | ஆற்றுப்படுத்தல் |
| தாழிசை | - | பாவினம் |
| நவின்றோர் | - | கூறியோர் |
| புணர்த்தல் | - | இணைத்தல் |

### பயிற்சி

1. எட்டுத்தொகை நூல்கள் எவை ?
2. பத்துப்பாட்டு நூல்கள் எவையெனக் கூறுங்கள் ?
3. தமிழ் இலக்கியம் போன்று வேறு எவ்வெவ்மொழியிலுள்ள நூல்கள் பழமை வாய்ந்தவை ?
4. மதுரைக் காஞ்சி எதனை வலியுறுத்துகிறது ?

### செயற்பாடு

1. சங்க இலக்கியத்திலுள்ள அகப்பாடல்கள் தற்காலத்தில் பயன்படுத்தப் படுமாற்றிற்குச் சில திரைப்படப் பாடல்களைத் தேடி எழுதுங்கள். இப்பாடல்களில் காணப்படும் அணிகளை எடுத்துக்கூறுங்கள்.

ஆக்கத்திறன்

## வில்லுப்பாட்டு

நாட்டுப்புறக் கலையிலே மிகச்சிறப்பான இடத்தைப்பெற்றிருப்பது வில்லுப்பாட்டாகும். வில்பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் கூறுவர். வில்லுப்பாட்டின் தாயகமே குமரி, நெல்லை மாவட்டங்கள் எனக் கூறலாம். 'வில்லடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை' என்ற பழமொழி வழங்குகிறது.

வில்லுப்பாட்டின் தோற்றத்தைப் பற்றி கவிஞர் சுப்பு ஆறுமுகம் கூறுவதைக் காண்போம். தென்பாண்டி நாட்டுப் பகுதியில், அன்றுள்ள வேடர்கள் வேட்டையாடி விட்டு வந்து மரத்தடி நிழலில் அமர்ந்தபோது, தோளிலிருந்த வில்லை மடியில் சாய்த்து அம்பை அந்த நாணில் தட்டித்தட்டிப் பாட்டைத் துவங்கினார்கள். பாவத்தின் கரையில் புண்ணியம், ஆடலின் முடிவில் பாடல். கொல்லும் விளையாட்டின் ஓய்வில் வில்லுப்பாட்டு. ''சோமலெ'' அவர்கள் 14ம் நூற்றாண்டில் அரசப்புலவர் என்னும் ஒருவரால் வில்லுப்பாட்டு தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுகிறார். தெய்வச் சிலையார் விறலிவிடு தூது எனும் நூலில் வில்லுப்பாட்டுப்பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. முற்கூடற்பள்ளு இதனைச் சிறப்பித்துக் கூறுகிறது.

வில்லுப்பாட்டின் உறுப்புக்களாக அமைந்த இசைக்கருவிகள் வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவையாகும். பம்பை, உறுமி, தக்கை, துந்துபி என்ற நான்கு கருவிகளும் சேர்ந்து எட்டுவகையான பக்கக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என அறிகிறோம்.

புலவர் நடுநாயகமாக வீற்றிருப்பர். இடதுபுறம் குடத்துக்காரர், இவர்களின் முன்பு குடத்தினில் உள்ள வில் இருக்கும் வீசுகோலைக் கொண்டு வில் நாணைத் தட்ட வசதியாக இருக்கும். புலவருக்குப்பின்னால் வரிசையாகப் பின்பாட்டுக்காரர், கட்டை, தாளம் ஆகியவற்றை இயக்குவோர் அமர்ந்திருப்பர். உடுக்குக்காரர் குடத்துக்காரரின் வலக்கையை அடுத்து அமர்ந்திருப்பார். பின்பாட்டுக்கு ஒருவர் தனியாக அமர்த்தப்படுவதும் உண்டு.

கதை துவங்கும் முன்பு காப்பு விருத்தம் பாடுவர். விநாயகர் வணக்கம் பாடப்படும். சாஸ்தா கதை கூறிய பின்பே கதை கூறப்படும். குருவடியை அடுத்து அவையடக்கமும் பின்னர் நாட்டுவளம், வரலாறு கூறி இறுதியில் 'வாழி பாடல்' நடைபெறும்.

சாத்தூர் பிச்சைக்குட்டி அவர்கள் வில்லுப்பாட்டில் புதிய உத்திகளைக் கையாண்டு நவீனப்படுத்தினார் எனலாம். ஆனால், ஆர்மோனியம், டோலக் போன்ற பக்கக்கருவிகளைப் பயன்படுத்தினார். தேவாளை சுந்தரம்பிள்ளை அவர்களும் பல புதுமைகளைப் புகுத்தினார். கவிஞர் சுப்பு அவர்களும் புதிய கருவிகளைப் புகுத்தினார்.

கோயில் விழாக்களில் முழங்கி வந்த கலையை, இன்று நாடறியச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனையே சாரும்.

உசரவிளை அப்பாவு நாடார், தேரூர் ஆண்டார்பிள்ளை, தேவாளை சுந்தரம்பிள்ளை, புன்னார்குளம் கோலப்பபிள்ளை, குறுங்குளம் நாராயணபிள்ளை, கழனிகுளம் மாடசாமி, நெல்லை அய்யன்பிள்ளை, புளியங்குடி பெருமாள்தேவர், செவக்குளம் தங்கையா, ஆத்தூர் கோமதி, கோவில்பட்டி சின்னப்பா, நெல்லை சந்தனகுமாரி, விளாத்திக்குளம் இராசலட்சுமி போன்றோர் வில்லுப்பாட்டுக்கலையில் தேர்ந்த கலைஞர்கள் ஆவர்.

வில்லுப்பாட்டுக் கலை, கதைப்பாடல்கள் பலவற்றை வாழவைத்த பெருமைக்குரிய கலையாகும்.

- செ. சக்திவேல்-

## வில்லுப்பாட்டின் பண்புகள்

வில்லுப்பாட்டின் தோற்றம், வளர்ச்சி, அதன் அமைப்பு என்பனவற்றை மேற்போந்த கட்டுரையிலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். இனி, வில்லுப்பாட்டின் பண்புகளை நோக்குவோம்.

1. வில்லுப்பாட்டின் கதை பாட்டிலும் உரையிலும் நகர்த்தப்படும். வில்லுப்பாட்டின் கதையானது புராணம் தழுவியதாகவோ, சமூகம் சார்ந்தாகவோ அமையலாம். குரு, சிஷ்யர்களின் உரையாடலின் வாயிலாகவும், பாட்டாலும் வில்லின் கதை சொல்லப்படும்.

2. வினா-விடைப் போக்கில் கதை வளர்க்கப்படும். சிஷ்யர்களின் வினாவுக்குப் பதிலாகவே குருவின் உரையும் பாட்டும் அமையும். கதைக்குப் பொருத்தமான வினாக்களைத் தொகுத்து விடையைக் காண்பதாக அமையும்.

3. பேச்சு வழக்கு சொற்பிரயோகமே பிரதான இடம்பெறும்.

4. நகைச்சுவைப் பாங்குடன் கதை சொல்லப்படுவது வில்லுப்பாட்டின் தனித்துவமான பண்பாகும்.

5. கிராமிய - நாட்டாரியல் கூறுகளைக்கொண்டு அமைத்திருத்தல்.

    1. பாடல்கள் நாட்டார் பாடல் தழுவியதாகவும், மெட்டுக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

    2. உடுக்கு, குடம், தாளம், கட்டை, பம்பை, உறுமி, தக்கை, துந்துபி போன்றநாட்டிய இசைக்கருவிகளுக்கு முதன்மை கொடுக்கப்படும்.

6. 1. வில்லுப்பாட்டின் பிரதான கதை மாந்தர் குருவே ஆவார். இவரைப் புலவர் எனவும் அழைப்பர். இவரே கதையைக் கொண்டு நகர்த்துவார். - குரல் வளம் மிக்கவராகவும் முகபாவம், அபிநயம் காட்டக் கூடியவராகவும் நகைச்சுவை உணர்வுமிக்கவராகவும் திகழ்வார்.

    2. வில்லுப்பாட்டின் ஏனைய மாந்தர்களைச் சிஷ்யர்கள் என்பர். இவர்களும் குரல் வளம் மிக்கவராகவும், ஒத்தாசையுடன் பாடக்கூடியவராகவும் திகழ்வார். அதோடு சிஷ்யர்கள் இசைக்கருவிகளை இசைக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

    குரு சிஷ்யர்களின் பரஸ்பர உறவும் சந்தர்ப்பத்திற்கேற்ப இயங்குவது அவசியம்.
    குரு சிஷ்யர்களின் கூட்டுறவாலே வில்லுப்பாட்டு வெற்றிபெறும்.

## வில்லுப்பாட்டின் அமைப்பு

1. வில்லுப்பாட்டின் அமைப்பு ஆரம்பகாலங்களில் இருந்து இன்று பெரிதும் வேறுபட்டுள்ளது. இன்று,

    1. கடவுள் வாழ்த்து.
    2. சபை வணக்கம்.
    3. கதை ஆரம்பம்.
    4. கதை வளர்ச்சி.
    5. முடிவு.
    6. சபையோருக்கு நன்றி கூறி மங்களம் பாடுதல் என அமையும்.

## மாதிரி வில்லுப்பாட்டு

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட //
வில்லினில் பாட
வந்திடுவாய் கணபதியே - வரம்
தந்தருள்வாய் கணபதியே (தந்.....)

குரு : தாய்மாரே தந்தையரே, அவையோரே இன்று நாம் இந்த அவையின் கண் ''தமிழ் வளர்ந்த வரலாறு'' என்கின்ற கதையை வில்லினில் பாட வந்துள்ளோம்.

சிஷ் : ஆமா

அவையடக்கம்:ஏட்டின் எழுத்தறியோம் - ஆமா
எழுத்தறியோம்
எழுதும்வகை நாமறியோம் - ஆமா
நாமறியோம்
பாட்டின் பொருளறியோம் - ஆமா
பொருளறியோம்
பாடும் வகை நாமறியோம் - ஆமா
நாமறியோம்.

குரு : சபையிலுள்ள பெரியோரே, தாய்மாரே தந்தையரே,
தம்பியரே, தங்கையரே அனைவருக்கும்
வணக்கம், வணக்கம், வணக்கம்.
எத்தனை பிழையுண்டேனும்
எல்லாம் பொறுத்தருள்வீர்.

சிஷ் : என்ன குருவே தமிழ் என்கிறீர்கள், தமிழ்தோன்றியது என்கிறீர்கள். தமிழ் வளர்ந்தது என்கிறீர்கள். இப்போ என்ன தமில் சொல்லுறியள்.

சிஷ் : நீ இப்பஎப்படித் தமிழ் பேசுகிறாயோ அப்படித்தான் இருக்கும், உன்ரை தமில்! நீங்கள் கதையைச் சொல்லுங்கள் குருவே

குரு : சரி விடயத்திற்கு வருவோம். மனிதனானவன் முதன்முதலில் பேசிய பழம்பெரும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். நம் அமிழ்தினும் இனிய செந்தமிழானது முதிர்ந்த இலக்கியச் செல்வத்தை உடையது. கலைவாணர்கள் கூடப் பிறந்தவள் என்று உறுதியாகக் கூற முடியாத தொன்மை வாய்ந்தவளே நம் தமிழன்னை.

சிஷ் 1 : கொஞ்சம் பொறுங்கோ அண்ணை. விண்வெளியில் ஆராய்ச்சி செய்து சந்திர மண்டலம் கூடப் போய் வந்தினம் எங்கடை விஞ்ஞானிகள். கொம்பியூட்டர், இன்ரனெற், ஈமெயில் என்கினம் அதிலை கூட எங்கடை தமிழ் மொழியைக் காணேல்லையே.

சிஷ் 2 : இன்ரனெற், ஈமெயில் எல்லாம் உன்ரை தமிழைக் கண்டு பிடிக்கவே போட்டவை. இந்தக் காலத்திலை மாப்பிள்ளை, பெண்பார்த்துத் திருமணம் முடிக்கவல்லோ கண்டுபிடிச்சவை. உனக்கு உது தெரிந்தால் நீ இன்னும் பிரமச்சாரியாய் இருக்கிறியே

குரு : இவ்வாறாக உலகின் மூத்த மொழியாக விளங்குகின்ற தமிழின் பழமையைக் ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளொடு முன்தோன்றிய மூத்த குடி'' எனச் சங்க கால நூலான 'புறப்பொருள் வெண்பாமாலை'' கூறுகிறது. இவ்வாறான தமிழானது.

பாடல்: தமிழின் மொழியோ பழமை வாய்ந்ததுவாய்
வாய்ந்ததுவாய்
உயர்ந்தே விளங்கும் மாட்சியதாய்
மாட்சியதாய்
யாவரும் நெருங்கிடவே இனியதுவாய்
இனியதுவாய்
சுகித்திடவே அபார சுவைமிக்கதாய்
விளங்கி சுவைமிக்கதாய் நின்றே பெருமை பெற்றது.

குரு : இவ்வாறான சிறப்புப் பெற்ற தமிழ்மொழியானது விந்திய மலையைத் தாண்டியும் பரவியிருந்தது.

சிஷ் : அப்போ, மலையைத் தாண்டி மேகத்துக்கும் போட்டுது போலை கிடக்கு.

குரு : இவ்வாறாக பெருமை பெற்ற தமிழானது எல்லையாக வரையறுக்கப்பட்ட இடம் பற்றிப் பனம்பாரனர் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

சிஷ்1 : கொஞ்சம் கேளுங்கோ அண்ணை அந்தக்காலத்திலை உந்தப் பனம்பானம் எண்ட கள்ளு இருந்துதான் எல்லாரையும் ஆட்டி வைச்சிருக்குப் போலை.

சிஷ்2 : அண்ணை எங்கடை ஊரிலையும் ஒருத்தர் கள்ளுக்குடிச்சுப்போட்டு

''கள்ளு வெறிக்குதடா
காத்தலிங்கச் சாமியடா
உள்ளம் கொதிக்குதடா
உவள் எங்கே போட்டாளடா''

எண்டு பாட, அவற்றை மனிசி பாவம் ஓடிவந்து என்னை கூப்பிட்டியளே எண்டு கேட்டவா. நான் பார்த்தனான்.

குரு : பனம்பாரனார் எனும் புலவர் கூறுவதைக் கேளுங்கள்

சிஷ் : ஆமா

குரு : வடவேங்கடம் முதல் தென்குமரிவரை ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம் எனக் கூறி, வடக்கே திருவேங்கடத்தினையும் தெற்கே குமரிமுனையையும் எல்லையாக வகுத்துத் தமிழ்நாடு தோன்றியது. இதனையே தமிழ் இலக்கிய வரலாற்றிலே லெமூரியாக் கண்டம் எனக்கூறுவர். இங்கு சொல்லப்பட்ட குமரி முனையினைக் கடல் தனதாக்கியதும், தமிழ்நாடு லெமூரியாவில் இருந்தவேளையிலே எகிப்துநாடு நீருள் இருந்தது என்பர் ஸ்கொட் எலியட் என்பார். ஆகவே பாருங்கள் எகிப்து தோன்றுவதற்கு முன்பே தமிழ்நாடானது தோன்றியிருக்க வேண்டுமல்லவா?

சிஷ் : ஆமா அண்ணை, தமிழ்வளரச்சங்கம் எல்லாம் இருந்தது என்டினம், அதுபற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ

குரு பாடல் : சரி, மதுரையில் வளர்ந்த சங்கத்தினை என்கண்களில்
கண்டேனே - அதில்
பாண்டிய மன்னன் தலைவனாய் இருந்த பக்குவம்
கண்டேனே
சங்கம் தனிலே அகத்தியன் அவனும், முதல்வனாய்
இருந்தனனே
முரஞ்சியூர் முடியார், காஞ்சினவழுதி,
கடுங்கோன் அவனும் அடுத்தவரானரே.''

இன்னும் இக்காலத்திலே பெருங்கவி, குருகு, வெண்டாளி அகத்தியம், தொல்காப்பியம், வியாழமாலை, மாபுராணம், பூதபுராணம், இசைநுணுக்கம் போன்ற நூல்களும் பாடப்பட்டன. இவ்வாறாக முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்கள் இருந்தமைக்கு களவியலுரை சான்று பகர்கின்றது.

சிஷ் 1 : பொறுங்கோ அண்ணை, எனக்குச் சின்னவயதிலை பாலபோதினியிலை படித்த பாடல்தான் மனதிலை வருகுது சொல்லட்டே அண்ணை.

சிஷ் 2 : சரி சினிமாக் கச்சேரி வைக்கப்போறான் அண்ணை.

குரு : சரி சொல்லு

சிஷ 1 : ''செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே''

சிஷ் 2 : உனக்குத் தேன் வந்து காதிலையே பாயும், தேன் குளவிக் கூட்டிலிருந்தல்லோ ஒழுகும்.

குரு : சரி, சரி! நம் செந்தமிழில், நமக்குக் கிடைக்கும் நூல்களுள் மிகப்பழமையானது தொல்காப்பியம் என்கின்ற இலக்கண நூலேயாகும். இதுவே தமிழ் மொழியின் தொன்மை, பழமை, சிறப்பு ஆகியவற்றை அறிந்து கொள்ள மிக்க துணையாக உள்ள நூலாகும்.

பாடல் : ''குறையிலா நிறைவு, அறிவுசால் செறிவு
நிரம்பிய வளமும், வரம்பு புறழாவடிவும்
வளர்ச்சி அன்றித் தளர்ச்சியுறாமல்
கட்டமைப்புடைய ஒப்புயர்வற்ற நூல்.''

சிஷ்1 : அப்போ தமிழ் வளர்ந்து முடிந்துதோ அண்ணை,

சிஷ2 : எங்கே எழும்பி ஓடப்போறாய். இரு.

குரு : இது மட்டுமன்றி அழகுக்கு அழகு சேர்ப்பது போல,

சிஷ் : சேர்ப்பது போல

குரு : எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் தோன்றித்தமிழை வளர்த்தன. காதல், வீரம் பேசப்பட்டன. பாவகைகள் தோன்றின. ஐவகை நிலங்கள் பிரிக்கப்பட்டு அவற்றிற்தான் ஒழுக்கங்கள் பேசப்பட்டன.

குரு : சங்க மருவிய காலத்து நூல்களாகக் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றி அறத்தைப் போதித்துத் தமிழை வளர்த்தன. வள்ளுவர், காரைக்காலம்மையார் போன்ற மேலும் பல புலவர்கள் தமிழை வளர்த்தனர். தமிழில் முதன்முதல் தோன்றிய காப்பியம் எதுவென்றால்..

சிஷ 1 : எதுவென்றால் எனக்குத்தெரியும் சிவாஜி நடித்த பராசக்திதானே?

சிஷ் 2 : இல்லை, உனக்குவிசரே! நல்லதங்காள் கதையல்லோ.

குரு : இவை எதுவுமில்லை, ‘சிலப்பதிகாரம் என்கின்ற காப்பிய இலக்கியமே முதன் முதல் தோன்றியது. மணிமேகலையும் இக்காலத்தில் எழுந்தமையால் இவை இரட்டைக் காப்பியங்கள் எனப்பட்டன. இதன் தொடர்ச்சியாகப் பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியம் வளர்ப்பதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றினர். பக்தி இலக்கியத்தை வளர்ப்பதற்காகப் பக்திப்பாடல்களை நனி சொட்டச் சொட்டத் தந்ததுடன், பல அற்புதங்களையும் செய்து தமிழை வளர்த்தனர். திருவாசகச்சிறப்பை இராமலிங்க அடிகளார் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

பாடல் : ‘‘வான் கலந்த மணிவாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப் பதுவே’’

குரு : ‘‘சோழர் காலத்திலே அறுபத்து மூன்று நாயன்மார்களினதும் பாடல்கள் தொகுக்கப்பட்டுச் சேக்கிழாரால் ‘‘பெரிய புராணமும்’’, ஆழ்வார்களின் பாடல்கள் திரட்டப்பட்டு நாத முனிகளால் ‘‘நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமும்’’ தொகுக்கப்பட்டன. ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், கம்பராமாயணம், நளவெண்பா போன்ற புராணங்களும், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், தக்கயாகப்பரணி போன்று சிற்றிலக்கியங்களும், நம்பியகப்பொருள், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நன்னூல், வீரசோழியம், வச்சணந்தி மாலை போன்ற இலக்கணநூல்களும் தோன்றித் தமிழை வளர்த்தன. சோழர் காலத்தில் தமிழ் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்ததனால் சோழர் காலம் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப்பட்டது.

சிஷ 1 : என்னண்ணை இந்தப்புத்தகங்கள் எல்லாம் எங்களுக்குக் கிடைக்கேல்லை. நீங்கள் எல்லாம் நிறையச் சொல்லுறீங்கள்.

சிஷ் 2 : புத்தகம் கிடைத்தால் மட்டும் நீ படிச்சுக் கிழிச்சுப் போடுவியே. அண்ணை சொல்லுறதை யெண்டாலும் கேள். கொஞ்சமெண்டாலும் ஏறும்.

குரு : நாயக்கர் காலத்தில் பள்ளு, உலா, கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின. இக்காலத்துத் தமிழுக்காகத் தன்னுயிரை ஈந்த நந்தியின் பிரிவைத் தாளாது பாடிய பாடல் நந்தியின் சிறப்பைச் செப்புகிறது.

பாடல் : ‘‘வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன்வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயாபரனே’’

சிஷ் : இந்தப் பாட்டைக் கேட்டு எனக்கு அழுகை வருகுதண்ணை.

குரு : இயற்கை எழில் போற்றும் பாடல்கள், எவ்வளவு சொல், பொருள், சுவைப்பெருக்கு நிறைந்து காணப்படுகிறது தெரியுமா?

பாடல் : ''ஆற்று வெள்ளம் நாளை வரத்தோற்றுதே குறிமலை
ஆள மின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே-கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக் குழைந்தேற்றடைக்குதே- மழை
தேடியொரு கோடி வானம் பாடியாடுதே
போற்றி திருமாலழகர்க் கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்துள்ளிக் கொள்வோமே''

குரு : ஐரோப்பியரின் வருகையினாலே ஏற்பட்ட கட்டாயக் கல்வியென ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டதனால் மதம் மாறியவர்கள் அதிகமானோராவார். இதனால் எமது தமிழ் மொழி வளர்ச்சியில் தொய்வு ஏற்பட்டது.

சிஷ் 1 : சரி ஆரோவந்து கெடுத்துப் போட்டாங்களே. நான் நினைச்சனான் இவ்வளவு வளர்ச்சிபெற்று வர ஏன் ஒருவனும் கெடுக்கக்குறுக்கை வரேல்லை எண்டு. பாத்தியளே வந்திட்டான்.

மெல்லத்தமிழ் இனிச்சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என்று சொல்கிறார்களே - அதுதான் சரி போலை கிடக்கு.

சிஷ்2 : ஏன் உனக்கு அடுத்தவரி தெரியாதா? கேள் தமிழின் சிறப்பை

''என்றந்தப் பேதை உரைத்தான்
இந்த வசை எனக் கெய்திடலாமோ.
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று பாடியல்லே இருக்கிறார்

குரு : ஆமாம் இவ்வாறாக பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ்மொழியானது சிறப்புற்று வளர்ந்தது. எட்டுத்திக்கும் பரவியது. மட்டுமன்றி, கலைச்செல்வங்களும் வந்து சேர்ந்துள்ளமை தெரிகிறது.

சிஷ் : அதுதான் இன்ரனெற்றிலையும் இப்ப நாங்கள் தமிழ் படிக்கிறோம்.

குரு : ஆனாலும் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் வருகையையொட்டி ஆங்கிலக் கல்வி மோகம், மதமாற்றம் போன்றவை சாடப்பட்டு, தமிழ்மொழியானது மீண்டும் தலையெடுத்து வளர வழிசமைக்கப்பட்டது.பாரதியாரின் புலமையை கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை பின்வருமாறு கூறுகிறார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனனேயடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா

சிஷ் : சரி சரி எனக்குப் பாரதியாரின் பாடலே தெரியும். சொல்லட்டே அண்ணை

குரு : சரி சொல்லு.

சிஷ் : வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக் கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரே தரமன்றோ
இந்த நிறம் சிறிதென்றும் - இஃது
ஏற்றமென்றும் சொல்லலாமோ.

குரு : பாரதி, பாரதிதாசன், நாவலர், சோமசுந்தரப்புலவர் போன்றோரால் சங்கத்தமிழின் கடின பதங்களாக இருந்த தமிழ் மொழியானது இலகுபடுத்தப்பட்டுத் தெளிவான உரைநடையுடனாக இனிய சொல் நயம் அமைந்த தமிழ் வளர்ச்சி பெற்று வந்தது உங்களுக்கும் எங்களுக்கும் பெருமையாக உள்ளதல்லவா ? மேலும், மேலும் எமது தமிழ் மொழியானது வளர்ச்சி பெற்றுச் செல்ல வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அதற்கான முயற்சிகளில் நாங்களும் ஈடு படுவோம் எனக் கூறித் 'தமிழ் வளர்ந்த வரலாறு' எனும் இக்கதையை நிறைவுசெய்து கொண்டு, விடைபெறுகிறோம்.

முடிவு பாடல் : விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக்கேட்டிருந்து
ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்களை மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம், வணக்கம், வணக்கம்.

### செயற்பாடு

பாரதியார், திருவள்ளுவர், சமாதானம் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வில்லுப்பாட்டு ஒன்றை ஆக்கி உங்கள் இலக்கிய மன்றங்களில் இசைத்து இன்புறுங்கள்.

# மரபுத் தொடர்

சொற்களுக்கு உரிய நேர்ப்பொருளை உணர்த்தாது அச்சொற்களின் ஆற்றலால் ஒரு குறித்த பொருளில் வழங்கி வரும் தொடர் மரபுத்தொடர் எனப்பெயர் பெறும். இதனை இலக்கணத்தொடர் எனவும் கூறுவர். மரபு-முறைமை. இலக்கண-குறிப்பு. கருத்தை ஆழமாகவும் சுருக்கமாகவும் சுவையாகவும் கூறுவதில் மரபுத்தொடர்கள் பெரிதும் உதவுகின்றன. பேச்சுவழக்கிலும் உரைநடை, செய்யுள் ஆகியவைகளிலும் மரபுத்தொடர்கள் பெரிதும் வழங்கி வருகின்றன. பிறரின் கருத்துகளைச் செவ்வனே அறிந்து கொள்ளவும் தம் கருத்தைச் செவ்வனே பிறருக்குக் கூறவும் வேண்டுமாயின் மரபுத்தொடர்களின் பொருளையும் பிரயோகங்களையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

‘ஒற்றைக்காலில் நிற்றல்’ என்பது மரபுத்தொடர். இதன் நேர்ப்பொருள் இரு காலில் அன்றி ஒருகாலில் நிற்றல் என்பதாகும். வழக்கில் இது, அதன் பொருளன்று. பிடிவாதமாக நிற்றல் என்பதே இத்தொடரின் பொருள். இது குறிப்பினாற் பெற்ற பொருளாகும். ஓட்டைக்கை என்பது இன்னொரு மரபுத்தொடர். இத்தொடரின் நேர்ப் பொருள் துவாரம் உள்ள கை; இது இத்தொடரின் பொருளன்று, ‘அதிகமாகச் செலவு செய்யும் கை’ என்பதே இத்தொடர் குறிக்கும் பொருள் ஆகும். இவ்வாறு மரபுத்தொடர் ஒவ்வொன்றும் வெளிப்படை, இலக்கணம் என்னும் இருவகைப் பொருள்களை உடையது. வெளிப்படைப் பொருள் சிறப்புடையதன்று. இலக்கணப் பொருளே சிறப்புடையது. இலக்கணப் பொருளை அறிந்து பயன்கோடல் வேண்டும்.

உபயோகமான மரபுத்தொடர்களும் அவைகளின் இலக்கணப் பொருள்களும்

### 1. அடிபற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| அடிநகர்தல் | - | இடம்பெயர்தல் |
| அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல் |
| அடிபிடித்தல் | - | குறிப்பின்வழிச் செல்லல் |
| அடிபிறக்கிடல் | - | தோற்றோடல் |
| அடிவிளக்குதல் | - | தன்மரபைப் புகழ்பெறச் செய்தல் |

### 2. கண்பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| கண் கலத்தல் | - | ஒருவரை ஒருவர் விரும்புதல் |
| கண்டு கழித்தல் | - | அனுபவித்து / வெறுத்தல் |
| கண்ணறுதல் | - | அன்பு குறைதல் |
| கண்ணுதல் | - | அருமையாதல் |
| கண்விடல் | - | துவாரம் உண்டாதல் |

### 3. கழுத்துப் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| கழுத்திற் கட்டுதல் | - | வலிந்து கொடுத்தல் |
| கழுத்துக் கொடுத்தல் | - | பிறரின் துன்பத்தின்போது உதவி செய்தல் |
| கழுத்தை முறித்தல் | - | வருத்துதல் |
| கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல் |

## 4. காது பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| காதிலடிபடுதல் | - | செய்தி பரவுதல் |
| காது குத்தல் | - | ஏமாற்றுதல் |
| காதைக்கடித்தல் | - | மறைபொருள் சொல்லல் |

## 5 கால் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| கால்கிளர்தல் | - | ஓடுதல் |
| கால் சாய்தல் | - | கெடுதல் |
| கால் பின்னுதல் | - | தடைப்படல் |
| காலைச் சுற்றுதல் | - | தொடர்ந்து பற்றுதல் |

## 6. கை பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| கை காட்டுதல் | - | திறமையை வெளிப்படுத்தல் |
| கை கொடுத்தல் | - | துன்பத்தில் உதவி செய்தல் |
| கை தலைவைத்தல் | - | பெருநட்டம் அடைதல் |
| கையறுதல் | - | வருந்துதல் |
| கையைக் கட்டுதல் | - | முயற்சி செய்யாதபடி தடுத்தல் |

## 7. செவிபற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| செவிசாய்த்தல் | - | இணங்கிக்கேட்டல் |
| செவிப்படுதல் | - | கேட்கப்படுதல் |
| செவியறிவுறுத்தல் | - | நல்லறிவு கூறுதல் |

## 8. தலைபற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| தலைகீழாய் நடத்தல் | - | முறை தவறி நடத்தல் |
| தலைகீழாய் நிற்றல் | - | பிடிவாதம் கொள்ளல், செருக்குடன் நடத்தல் |
| தலையளி செய்தல் | - | முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல் |
| தலையால் நடத்தல் | - | முறைதவறி நடத்தல் |
| தலையைத் தடவுதல் | - | சிந்தனை செய்தல் |

## 9. நாக்குப்பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| நாக்கு அசைதல் | - | வாய்திறந்து சொல்லுதல் |
| நாக்குப் புரளுதல் | - | தவறுதல் |
| நாக்கு வளைத்தல் | - | பழித்தல் |

## 10. பல்பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| பல்லிளித்தல் | - | ஏளனஞ்செய்தல் |
| பல்லுக்கடித்தல் | - | துன்பந்தரும் ஒன்றைச் சகித்துக்கொண்டிருத்தல் |
| பல்லைக்காட்டுதல் | - | இரந்துவேண்டல் |

## 11. முகம்பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| முகம் கொள்ளுதல் | - | விரும்புதல் |
| முகம் புகுதல் | - | எதிர்சென்று நிற்றல் |
| முகமாதல் | - | உடன்படல் |

## 12. வயிறுபற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வயிறுகடித்தல் | - | பசியுண்டாதல் |
| வயிறு கழுவுதல் | - | அரும்பாடுபட்டு வாழுதல் |
| வயிறு வாய்த்தல் | - | மகப்பேறு |

## 13. வாய் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வாய்திறத்தல் | - | பேசத்தொடங்குதல் |
| வாய்பூட்டுப்போடல் | - | பேசாது தடுத்தல் |
| வாய் மூத்தல் | - | அடக்கமின்றிப் பேசுதல் |
| வாய்விடுதல் | - | வெளிப்படையாகக் கேட்டல் |

## 14. வால் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வாலாட்டுதல் | - | சேட்டை பண்ணுதல் |
| வால் முளைத்தல் | - | உலகம் பிடிபடல் |
| வால்கட்டுதல் | - | முகமன் கூறிக்கிளப்பி விடுதல் |

## 15. ஏனைய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| ஆட்கொள்ளுதல் | - | அடிமையாகக் கொள்ளுதல் |
| குடிமுழுகிப் போதல் | - | முற்றும் அழிதல் |
| துறைபோதல் | - | ஐயந்திரிபறக் கற்றல் |
| தொழுகள்வன் | - | ஏமாற்றுக்காரன் |
| முதலைக்கண்ணீர் | - | பொய் இரக்கம் |

## பயிற்சி

1. பொருத்தமான கருத்தை உணர்த்தும் மரபுத்தொடரை அடைப்புக்குறிக்குள் இருப்பனவற்றில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுங்கள்.

    1. ஒரு செயலை முடிக்கும் மனவுறுதியுடன் அதில் முனைந்து நிற்றல். (ஒற்றைக்காலில் நிற்றல், கங்கணங்கட்டுதல், கசகரணம் போடுதல், கண்ணாயிருத்தல்)
    2. கெழுதகைமை கொண்ட நண்பர் இருவரில் ஒருவர் மற்றவருக்குத் துரோகஞ் செய்தல் (நட்டாற்றில் விடுதல், முகத்திற் கரிபூசுதல், இரண்டகஞ் செய்தல், எடுத்தெறிதல்)
    3. ஒரு தொழிலை மனவிருப்பின்றிக் கடமைக்காகச் செய்தல் (கடன் கழித்தல், கள்ளேடு விடுதல், ஆறப்போடுதல், கைவிடுதல்)
    4. பொருள் பண்டமெல்லாம் இழந்து ஆதரிப்பார் எவருமின்றி நிற்றல். (பஞ்சாய்ப்பறத்தல், மட்டையடித்தல், சந்தியில் நிற்றல், சந்திக்கு இழுத்தல்)
    5. மனக்காழ்ப்பினால் ஒரு குடும்பத்தை முற்றாய் அழித்தல் (வயிற்றிலடித்தல், கருவறுத்தல், வாயில் மண் போடுதல், வேலைசாய்த்தல்)

2. பின்வரும் மரபுத்தொடர்களுக்கு ஏற்ற கருத்தினை அடைப்புக்குறிக்குள் இருக்கும் கருத்துகளிலிருந்து தெரிவு செய்க.

    1. ஆழம் பார்த்தல் என்பது (அளவெடுத்தல், பரிசோதனை செய்தல், ஒருவனது அறிவு பண்பு முதலியனவற்றை ஆராய்தல், சந்தேகங்கொள்ளுதல்)
    2. உப்பில்லாப் பேச்சு என்பது (சுவையில்லாத பேச்சு, பயனற்ற பேச்சு, நம்பமுடியாத பேச்சு, குழந்தைப்பேச்சு)
    3. கண்ணோடுதல் என்பது (கண்ணாற் பார்த்தல், கண்ணடித்தல், இரங்குதல், அங்குமிங்கும் பார்த்தல்)
    4. கையாலாகதவன் என்பது (ஒன்றுந் தெரியாதவன், வேலை செய்யுந் திறமையற்றவன், கை முடமானவன், கையால் ஒன்றுஞ் செய்ய முடியாதவன்)
    5. குரங்குப்பிடி என்பது (குரங்கின் பிடி, குரங்குபோற் பிடித்தல், பிடிவாதம், அழுத்தமான பிடி)

3. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| அவசரக்குடுக்கை | மனப்பால் குடித்தல் | இலைமறைகாய் |
| தூண்டில் போடுதல் | கண்மூடித்தனம் | தலைதடுமாற்றம் |
| சீட்டுக்கொடுத்தல் | கல்லில் நாருரித்தல் | |

இலக்கணம்

## வியங்கோள் வினைமுற்று

1. நீங்கள் நீடூழி வாழ்க!
2. வறுமை ஒழிக!
3. விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடைதருக.

இவ்வாக்கியங்களில் வினைச்சொற்கள் யாவை?

வாழ்க, ஒழிக, தருக என்பவை வினைச் சொற்களாகும். இவை வினையடிகளுடன் -க- விகுதி பெற்று வந்துள்ளதை அவதானிக்கலாம்.

வினையடி + க விகுதி பெற்றுவரும் வினைகளையே வியங்கோள் வினைமுற்று என்பர்.

இவ்வினைவடிவம் ஒருவரை

1. வாழ்த்துவதற்கு
2. எதிர்ப்பை அல்லது வெறுப்பைத் தெரிவிப்பதற்கு
3. ஒருவரிடம் ஒரு காரியத்தைச் செய்யுமாறு வினையமாக வேண்டிக் கொள்வதற்கு பயன்படுகிறது.

| | |
|---|---|
| உங்கள் வாழ்வில் இன்பம் மலர்க!<br>நீங்கள் எல்லாச் செல்வமும் பெறுக! | வாழ்த்தல் |
| கொடுங்கோல் அரசு வீழ்க!<br>உன் புத்தி பேதலித்துப் போக! | வெறுப்பு / எதிர்ப்பு |
| உங்கள் குறைகளை அதிகாரியிடம் கூறுக.<br>முதல் இருவினாவிற்கு மட்டும் விடை தருக. | வினையமாக வேண்டுதல் |

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.

| | | |
|---|---|---|
| 1. பாவிகள் ஒழியட்டும். | - | வெறுப்பு |
| 2. அவர்கள் நீடூழி வாழட்டும். | - | வாழ்த்து |
| 3. வையம் செழிக்கட்டும். | - | விருப்பு |
| 4. மழை பொழியட்டும். | - | விருப்பு |

ஒழியட்டும், வாழட்டும், செழிக்கட்டும், பொழியட்டும் என்பவையும் வியங்கோள் வினைமுற்றுகளே.

தற்கால தமிழில் -அட்டும்- என்பதும் வியங்கோள் வினை விகுதியாகப் பயன்படுகின்றது.

-அட்டும்- வேண்டுதல் பொருளில் வருவதில்லை. வாழ்த்து, வெறுப்பு, விருப்பு ஆகிய பொருள்களிலேயே வருகின்றது.

பழந்தமிழில் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளைக் கூறுவர்

வாழ்க (க)

வாழிய (இய)

வாழியர் (இயர்)

வர உண்ண (அ)

ஓம்பல், எனல் (அல்)

இவற்றில் தற்காலத் தமிழில் -க- பெரும்பான்மையாகவும் -இய- விகுதி சிறுபான்மையாக கவிதைகளிலும் வருகின்றது.

## பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வியங்கோள் வி.மு. விகுதிகளை இனங்கண்டு அவற்றின் வகைகளையும் குறிப்பிடுக.
    1. மணமக்கள் நீடுழி காலம் வாழட்டும்.
    2. அறம் வெல்க, அதர்மம் ஒழிக.
    3. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடைதருக.
    4. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே.
    5. போர் ஒழிக, சமாதானம் ஓங்குக.

## செயற்பாடு

1. பின்வரும் பாடலிலுள்ள ஏவல் வினைகளை இனங்கண்டு எழுதுக.

ஓடிவிளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.
சின்னஞ் சிறு குருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா.
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

2. பின்வரும் பாடலிலுள்ள வியங்கோள் வினைகளை இனங்கண்டு எழுதுக.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுதல் என்பது இழுக்கு.